மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 161. திரு. ஆர். ஈஸ்வரன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

161—

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*1031 திரு. ஆர். ஈஸ்வரன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் நீதி மன்றம் செல்வதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலத்தை கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் நீதி மன்றம் செல்வதை அரசு தடை செய்ய இயலாது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும்போது அந்த நிலத்தின் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் செல்வதால் பல ஆண்டுகள் கால தாமதமாகின்றது. அதை மாற்றுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையிலுள்ள வழக்குகளை அரசுத் தரப்பு வக்கீல் மூலம் விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 162. டாக்டர் எஸ். சுந்தரராஜ் - மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

162—

ஆதிதிராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல்.

*1723 டாக்டர் எஸ் சுந்தரராஜ் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அரசு கட்டிய ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு நிதியுதவி அளிக்குமா?

TRUTH ALONE TRIUMPHS

1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு கட்டிய ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஆதி திராவிட மக்களுக்கு நீண்ட நாள் பலனளிக்கக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு கட்டப்படும் வீடுகள் கட்டிமுடித்த வுடனேயே அல்லது குடிபுகுவதற்கு முன்பே விரிசல் ஏற்பட்டு உடைந்து விடுகின்றன. அப்படி பழுதடையும் வீடுகளை அவர்கள் பழுது பார்ப்பதற்கு போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் அந்த வீடுகளை ரிப்பேர் செய்வதற்கு மாண்பு மிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று ஆதி திராவிட மக்கள் எண்ணுகிறார்கள். ஆகவே, அந்த ஆதி திராவிட மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிற அரசாக விளங்குவதால், அரசு மீண்டும் அந்தக் கோரிக்கையின் மீது பரிசீலனை செய்ய நிதி உதவி அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டும்போதே, அவர்கள் சம்மதத்தின் பேரில்,—அதாவது அவர்களே ரிப்பேர்களையும் செய்து கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மேலும் நாம் ரிப்பேரை செய்துகொண்டே போனால் புதிதாக வீடுகட்டும் திட்டம் செயல்படுத்துவது கடினமாகும். எனவே நிதி நிலையை கருத்தில் கொண்டு பழுது பார்க்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.கழக ஆட்சியின் போது முதல்வராக இருந்த கருணாநிதி அவர்கள் ரத யாத்திரை வந்தபோது கட்டப்படாத அரைகுறை நிலையிலேயே இருந்த பல வீடுகள் திறக்கப்பட்டு விட்டன. அவைகளையெல்லாம் முழுமையாகக் கட்டித் தருவதற்கு அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் அரசின் கவனத் திற்குக் கொண்டுவந்தால் அந்த விட்டுப்போன வீடுகளை கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.